தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, தை 24

2011 பிப்ரவரி 7, திங்கட்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம் – தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து"

ஆற்றல் வாய்ந்த பெரியவர்கள் முன்னே, மற்றவர்கள் காதுக்குள் பேசுவதையும், அவர்களுடன் சேர்ந்து சிரிப்பதையும் தவிர்த்து, அடக்கமெனும் பண்பைக் காத்திடல் வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 11, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

கட்டட வசதி

***115399—திரு. அ. சின்னசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டில் போக்குவரத்துப் பணிமனைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரணாம்பட்டில் பேருந்து நிலையத்தின் அருகில் அரசுக்குச் சொந்தமான நிலம் கிடைக்கப்பெறாததால் புதியதாகப் பணிமனை அமைக்க இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு நகரத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டடம் கட்ட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரி வருகிறோம். பேரணாம்பட்டிலே போதுமான இடம் இல்லாத காரணத்தினால், பேரணாம்பட்டிற்கு அருகில் இருக்கின்ற செல்லப்பள்ளி கிராமத்தில் இடம் பார்வையிடப்பட்டு, அந்த இடத்தினைப் போக்குவரத்துக் கழகப் பொது மேலாளர் அவர்களிடத்திலே காண்பித்தோம். அவர், அந்த இடம் சற்றுத் தொலைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கடுத்து, பேரணாம்பட்டு நகரத்திற்கு அருகில் சிவராய நகரில் சர்வே எண்கள் 799, 376/2—ல் 2.65 ஏக்கர் இடத்தை நாங்கள் தேர்வு செய்து அந்த இடத்தைப் போக்குவரத்துக் கழகப் பொது மேலாளர் அவர்களிடத்திலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடத்திலும் காண்பித்திருக்கிறோம். அந்த இடம் பேரணாம்பட்டு போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலேயே போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டடம் கட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பொன்னாச்சியம்மன் கோவில் நிலத்திற்குச் சொந்தமான சர்வே எண்கள் 282, 283 ஆகியவற்றில் 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்த நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்கிறபொழுது, வழக்கு இருப்பதாகவும், எனவே, அந்த நிலத்தைக் கையகப்படுத்த இயலாது

2011 பிப்ரவரி 7]

என்றும், மாவட்ட ஆட்சித்தலைவர், வட்டாட்சியர் ஆகியோர் தெரிவித்த காரணத்தினால், பிறகு வேறு இடம் பார்க்கின்றபோது அங்கிருந்த இடம் சற்றுத் தொலைவாக இருந்த காரணத்தினால் அந்த இடம் சரியாக இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இந்தக் கேள்வி கேட்டு கிட்டத்தட்ட 6, 7 மாத காலம் ஆகியிருக்கும். இப்போது புதியதாக வேறு இடம் பார்த்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். உரிய முறையில் விளக்கம் கேட்டு, வாய்ப்பு இருக்குமானால் விரைவிலேயே பணிமனை அமைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக இந்தப் போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் அங்கு பலவிதமான அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று அனைவரும் கூறுகின்றார்கள். நாங்கள் ஏற்கெனவே கேட்டபடி, அந்த இடத்தினைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், பொது மேலாளர் அவர்களும் பார்வையிட்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்த இடத்திலேயே விரைவில் போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை சரியாக ஒரு வருடம், ஒரு மாதத்திற்கு முன்பாகவே, கிட்டத்தட்ட 13 மாதங்களுக்கு முன்பாகவே கேட்டிருக்கின்றார்கள். அதற்குரிய பதில் வந்து கிட்டத்தட்ட 6 மாத காலமாகியிருக்கிறது. எனவே, சமீபத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எங்களிடத்தில் குறிப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்ற கருத்துகளை எங்கள் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

முற்பகல் 9–35

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் போக்குவரத்துக்கான யூனிட் அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அலுவலகத்தில் இன்ஸ்பெக்டர் பணியிடம் காலியாக இருக்கிறது. இப்போது கும்பகோணத்திலிருந்து ஒரு பொறுப்பாளர் அனுப்பப்பட்டிருக்கிறார். அவர் இப்போது புதிதாகப் போடப்பட்டவர் என்ற காரணத்தினாலே பணிகள் தேக்கம் அடைகின்றன. ஆகவே, அனுபவம் உள்ள ஓர் ஆய்வாளரை அங்கே பணி நியமனம் செய்வதற்குரிய முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலை நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களால் 57 Grade II Inspector–களுக்கான பணி ஆணைகள் வழங்கப்படவிருக்கின்றன. எனவே, நாளை மறுநாளுக்குள் அங்கே புதிய அலுவலர் நியமிக்கப்பட்டுவிடுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2007–2008 ஆம் ஆண்டில் பரமத்திவேலூரிலே ஒரு வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு அங்கே திறக்கப்பட்டது. அதேசமயத்தில் பணிமனையை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்தேன். அதற்கான நிலமும் பார்த்தார்கள். இப்போது பரமத்தி சுப்பிரமணிய சுவாமி கோயில் அருகில் அந்தக் கோயிலுக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டடத்தையும், அங்கேயே பணிமனையையும் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2011 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஏனென்று கேட்டால், ஒவ்வொரு வண்டியும் பதிவு செய்யப்படுகின்றபோதே அதனுடைய அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக தனித் தொகை வசூலிக்கப்பட்டு அரசாங்கத்தில் இருக்கிறது. இடம் இருக்குமானால், உடனடியாக ஒவ்வோராண்டுமே கிட்டத்தட்ட 12 கட்டடங்கள், 13 கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தை எங்களுக்குக் கிடைப்பதற்கு உதவுவார்களேயானால், விரைவிலே பணிமனைக்கான கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும். அதேநேரத்தில் பணிமனை அமைக்கின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற அரசு சட்ட திட்டம் என்பது 40 கிலோ மீட்டருக்கு ஒரு பணிமனைதான் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், இன்றைக்கு பேருந்துகள் அதிகமாக ஒவ்வோர் இடத்திலும் இயங்குகின்ற காரணத்தால், அருகிலே பணிமனை இருக்குமானால், அந்த இடத்திலே புதிய பணிமனை அமைக்கவும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், போக்குவரத்துக் கழகத்திலே நிதிநிலை மிகவும் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உரிய தொகையைத் தருவார்களேயானால், அந்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *13,* *மாண்புமிகு* **உறுப்பினர் திரு.** *ராம. சுப்புராம்,* **மாண்புமிகு** *உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

பகுதிநேரக் கூட்டுறவு அங்காடி

***115402—திரு. ராம. சுப்புராம்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—